செ.வெ.எண்-43 நாள்-23.09.2020

# அரியலூர் மாவட்டம்

## இலவச அவசர ஊர்தி சேவையினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உயிர்காக்கும் கருவிகள் பொருத்தப்பட்ட இலவச அவசர ஊர்தி வாகனத்தினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று (23.09.2020) கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா தெரிவித்ததவாது,**

அரியலூர் மாவட்டத்தில் மக்கள் விபத்து, பிரசவம், நெஞ்சு வலி மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்கான தேவைகள் உள்ளிட்ட அவசர காலத்தில் அரசு மருத்துவமனை செல்ல 17 இடங்களிலிருந்து 108 அவசர ஊர்தி இயக்கப்பட்டு வருகிறது.

தற்போது தேசிய நெடுஞ்சாலை விரிவாக்க பணிகள் நடைபெற்று வருவதால், மக்கள் எளிதில் இச்சேவையை பயன்படுத்திக்கொள்ளும் விதமாக மேலும் 2 புதிய அவசர ஊர்திகள் வாரணவாசி, தத்தனூர் பொட்டக்கொல்லை ஆகிய இரு இடங்களில் புதியதாக தொடங்கப்பட்டது.

மேலும், அரியலூர் அரசு மருத்துவமனையிலிருந்து மேல் சிகிச்சைக்காக அழைத்து செல்லப்படும் இவ்வாகனத்தில் மேம்படுத்தப்பட்ட உயிர்காக்கும் கருவிகள் பொருத்தப்பட்ட ஆம்புலன்ஸ் சேவையும் தொடங்கப்பட்டது. இதில் வென்டிலேட்டர், மானிட்டர், டீ.பி புல்லேட்டர் போன்ற கருவிகள் உள்ளன. எனவே, இச்சேவையினை பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ளுமாறு மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் பொ.சந்திரசேகர், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) இளவரசன், ஒன்றியக்குழுத்தலைவர் செந்தமிழ்செல்வி, ஆம்புலன்ஸ் சேவை மாவட்ட மேலாளர் அறிவுக்கரசு, ஒருங்கிணைப்பாளர் சுரேஷ் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்தகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**